# பெப்ரவரி – 13 – செவ்வாய்

**புனித தூய ரிக்ஸி கத்தரின்**

**ஆண்டவர் தம் மக்களைத் தள்ளிவிடார்: திபா. 94:14**

**முதல் வாசகம் : யாக்கோபு1 : 12 – 18**

சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்களது தகுதி மெய்ப்பிக்கப்படும்போது, தம்மீது அன்பு கொள்வோருக்குக் கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றிவாகையினை அவர்கள் பெறுவார்கள். சோதனை வரும்போது, "இச்சோதனை கடவுளிடமிருந்து வருகிறது" என்று யாரும் சொல்லக்கூடாது. ஏனெனில் கடவுள் தீமையின் தூண்டுதலுக்கு உள்ளாவதில்லை. அவரும் எவரையும் சோதிப்பதில்லை. ஒவ்வொருவரும் தம் சொந்தத் தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகின்றனர். அது அவர்களைக் கவர்ந்து மயக்கித் தன் வயப்படுத்துகிறது. பின்னர் தீய நாட்டம் கருக்கொண்டு பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை விளைவிக்கிறது. என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, ஏமாந்துபோக வேண்டாம். நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன. அவரிடம் எவ்வகையான மாற்றமும் இல்லை அவர் மாறிக்கொண்டிருக்கும் நிழல் அல்ல. தம் படைப்புகளுள் நாம் முதற்கனிகளாகும்படி உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நீர் கண்டித்துப் பயிற்றுவிப்போர் பேறு பெற்றோர்.

**நற்செய்தி : மாற்கு 8 : 14 - 21**

அக்காலத்தில் சீடர்கள் தங்களுக்குத் தேவையான அப்பங்களை எடுத்துச்செல்ல மறந்துவிட்டார்கள். படகில் அவர்களிடம் ஓர் அப்பம் மட்டுமே இருந்தது. அப்பொழுது இயேசு, "பரிசேயர், ஏரோதியர் ஆகியோரது புளிப்பு மாவைக் குறித்து மிகவும் கவனமாயிருங்கள்" என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்களோ தங்களிடம் அப்பம் இல்லையே என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இதை அறிந்த இயேசு அவர்களை நோக்கி, "நீங்கள் உங்களிடம் அப்பம் இல்லை என ஏன் பேசிக் கொள்ளுகிறீர்கள்? இன்னுமா உணராமலும் புரிந்து கொள்ளாமலும் இருக்கிறீர்கள்? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்ணிருந்தும் நீங்கள் காண்பதில்லையா? காதிருந்தும் நீங்கள் கேட்பதில்லையா? ஏன், உங்களுக்கு நினைவில்லையா? ஐந்து அப்பங்களை நான் ஐயாயிரம் பேருக்குப் பிட்டு அளித்த போது, மீதியான துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தீர்கள்?" என்று அவர் கேட்க, அவர்கள் "பன்னிரண்டு" என்றார்கள். "ஏழு அப்பங்களை நான் நாலாயிரம் பேருக்குப் பிட்டு அளித்தபோது மீதித் துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தீர்கள்?" என்று கேட்க, அவர்கள், "ஏழு" என்றார்கள். மேலும் அவர் அவர்களை நோக்கி, "இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா?" என்று கேட்டார்.

**தியானம்:** இறைமகன் இயேசு தமது வார்த்தைகளில் எப்போதும் உண்மை உள்ளவராயும், மற்றவர்கள் தம்மை யார் என்று புரிந்துகொள்ள தமது அருஞ்செயல்களாலும், போதனைகளாலும் வாழ்ந்துகாட்டினார் என்பதனை நற்செய்தி எமக்கு விளக்குகின்றது. அதேவேளையில் தப்பான போதனைகள் மட்டில் மிகவும் கவனமாக இருக்குமாறும் இறைமகன் இயேசு எமக்கு இன்றைய நற்செய்தி ஊடாக எச்சரிக்கை விடுப்பது மட்டுமல்ல, வேறு விதமாகவும் போதிக்கின்றார். அன்றைய திருச்சீடர்கள் போன்று, நாமும் எமது வாழ்வில் துயர நினைவுகள், சோகம், வேதனைகள், சோதனைகள், என்பவற்றில் மூழ்கும்போது இறைமகன் இயேசுவின் வாழ்வுதரும் வார்த்தைகளை மறந்து, தப்பறைகளின் போதனைகளால் அனாப்பப்பட்டு, கிறிஸ்து இங்கே, கிறிஸ்து அங்கே என அலைபாய்வதால், சத்துருவானவன் எமது இறைநம்பிக்கை, விசுவாசம் என்பவற்றை தளர்த்துகின்றான். எனினும், "இன்னுமா உணராமலும் புரிந்துகொள்ளாமலும் இருக்கிறீர்கள். உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று" (மாற்கு8:17) என்று எம்மைப்பார்த்து இறைமகன் இயேசு கேட்கின்றார். ஆயினும்,"நேரம் நெருங்கி விட்டது" என இறைமகன் இயேசு அறிவித்தும் இன்றுவரையில் எம்மத்தியில் நடப்பதென்ன? எனவே, நாம் மறுமலர்ச்சி, புதுவாழ்வு பெற எதற்காக மறுக்கின்றோம்? எனசிந்திப்போம். இறை இயேசுவின் அனுபவத்துக்குள் மாறிவிடுவோம் என்ற தயக்கமா? அல்லது, இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்து அதனை ஏற்று எமது பாவ வாழ்வை மாற்றி அமைக்க வேண்டுமென்ற பயமா? ஆதலால், கானாவூரில் கலக்கம் ஏற்பட்ட வேளையில் "அவர் சொல்வதைக் கேட்டுச் செய்யுங்கள்" என்று அன்னை மரியாள் கூறியதை நினைவுக்குக் கொண்டுவருவோம். எமது எதிர்கால (பரலோக) வாழ்வை நிர்ணயிக்க வேண்டியவர்கள் நாங்களே என்ற உண்மையை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம். ஏனெனில் இவ்வுலகம் தரமுடியாத அமைதியைத் தரவல்லவர் இயேசு ஒருவர் மட்டுமே. உள்ளம் கலங்காது, மருளாது நல்ல பங்கைத் தெரிந்தெடுப்போம்.